## சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – சிவகங்கை மாவட்டம் – பணியில் இருக்கும் போது காலமான துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.எம்.சோலைராஜ் என்பவரின் மகன் திரு.எஸ்.மதன்குமார் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ3) துறை

அரசாணை (4ப) எண். 11

நாள்: 05.05.2021
பிலவ, சித்திரை 22,
திருவள்ளுவர் ஆண்டு–2052
படிக்கப்பட்டவை:

1. சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை எண்.ப்பி3/9857/2020 நாள்:15.12.2020.
2. அரசாணை (நிலை) எண்.18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020.
3. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்:26.02.2021.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.9941/2021/டி3, நாள்:26.03.2021.

* * * * *

**ஆணை:**

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், சிவகங்கை மாவட்டம், கல்லல் ஊராட்சி ஒன்றியத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலராகப் பணிபுரிந்து 27.03.2020 அன்று காலமான திரு.எம்.சோலைராஜ் என்பவரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.எஸ்.மதன்குமார் என்பவருக்கு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 17.12.2020 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மறைந்த அரசு ஊழியர் தகுதிகாண் பருவம் முடித்த பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.எஸ்.மதன்குமார் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 28.05.2020 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 11.05.1997 என்றும், அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 22 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 23 என்றும், பணி நியமன நாளில் தனியரின் வயது 23 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்து, மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள்:01.08.2018– கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணி வரன்முறை குறித்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

..2

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையானது தற்போது 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணைஅடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித் தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (one level higher than the appointing authority) அளவிலேயே வரன்முறை செய்ய உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசுப் பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என ஆணைகள் மற்றும் வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் மேலே இரண்டு மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளின்படி, அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.எஸ்.மதன்குமார் என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 17.12.2020 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதும் இருப்பின் அவற்றைப் பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் 20.04.2021 ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.7404/ட்டி.1/2021 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அலுவல் சாரா எண்.12988/ஜி1/2021, நாள்:27.04.2021-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ஹன்ஸ் ராஜ் வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

மே.கு.ந.க.எண்.ப்ஏ3/9857/2020, நாள்: 30.6...
சார்பு செய்யப்படுகிறது.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர், சிவகங்கை மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை–15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், சிவகங்கை மாவட்டம்.

<u>நகல்:</u>
திரு.எஸ்.மதன்குமார், இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, சிவகங்கை மாவட்டம்.
(வழி:மாவட்ட ஆட்சித் தலைவர், சிவகங்கை மாவட்டம்.)
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

பெறுநர்:
திரு.சோ.மதன்குமார்
இளநிலை உதவியாளர்
ஊராட்சி ஒன்றியம்
திருப்பத்தூர்
(அலுவலகத் தலைவர் மூலம்)

நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
திருப்பத்தூர்.

மாவட்ட ஆட்சியருக்கான
நேர்முக உதவியாளர்
(வளர்ச்சி)
சிவகங்கை மாவட்டம்
சிவகங்கை
30.6.2021

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்